செய்திக் குறிப்பு dt: 29.01.2018

காரைக்கால் மாவட்டம் அம்பகரத்தூரில் அமைந்துள்ள தொடக்க பள்ளியை மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. R. கமலக்கண்ணன் அவர்கள் ஆய்வு செய்தார்கள். அப்போது ஆசிரியர்களுடன் பேசுகையில் மாதம் இரு முறை பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு நிகழ்த்த வேண்டும். அப்போது தான் மாணவர்களின் கல்வி அறிவு மேம்படும் என்று கூறிய அமைச்சர் அவர்கள் மாணவர்களின் கல்வி வளர்ச்சி ஐந்தாம் வகுப்பு வரை கண்டிப்பாக உயர வேண்டும். அதற்கு ஆசிரியர்களின் பங்கு மிகவும் முக்கியம் என்று கூறினார்கள். மேலும் மாணவர்கள் பயன்படுத்தும் கழிவறையையும் அமைச்சர் பார்வையிட்டார்கள். உடன் பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

29/1/18